| | | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் | | | | |
| | மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 10/05/2017 | முதல் 14/05/2017 |
| | அறிக்கை எண் : | 037 / 2017 | வெளியீட்டு நாள் : | 09/05/2017 | |

| கடந்த கால வானிலை 05/05/2017 முதல் 08/05/2017 வரை | |
|---|---|
| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 39-41 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-29 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 30-64 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 0-15 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை** ( 14-05-2017 8.30 மணி வரை )

| **காரணிகள்** | **10-05-2017** | **11-05-2017** | **12-05-2017** | **13-05-2017** | **14-05-2017** |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 9 | 7 | 1 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 40 | 40 | 40 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 8 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் 10 மற்றும் 11ம் தேதிகளில் மிதமான மழையும் 12ம் தேதியன்று மிக லேசான மழையும் பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. அடுத்த 5 நாட்களுக்கு லேசான மேகமூட்டத்துடன் கூடிய வெப்பமான வானிலையே நிலவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: காய்கறி மற்றும் மல்லிகை**

- தற்போதைய சூழ்நிலையில் மிளகாயில் போரான் சத்து பற்றாக்குறை காணப்படுகிறது. இதன் அறிகுறியாக இளம் இலைகள் மேடும் குழியுமாக மாறிவிடும், முதிர்ந்த இலைகளின் நுனியில் மஞ்சள் நிறம் தோன்றி இலை ஓரங்களில் பரவும், நடு நரம்புகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக மாறும், இலைகள் கெட்டியாகி விரைவில் நொறுங்கி விடும். இதனை நிவர்த்தி செய்ய 3 கிராம் போராக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அந்த கரைசலை அறிகுறிகள் மறையும் வரை 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் பருவநிலையில் மல்லிகையில் மொக்கு துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் புழு மொக்குகளைத் துளைத்து சாப்பிடும். தாக்கப்பட்ட மொக்குகள் இலேசான மெல்லிய நூலாம்படையில் பின்னப்பட்டிருக்கும். இதனைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கலாம். மேலும் விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம் அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மாலத்தியான் கலந்து தெளிக்கலாம். செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்து பராமரிக்க வேண்டும்.
- தற்போதைய சூழ்நிலையில் மானாவாரி நிலத்திற்கு மட்டுமல்லாமல், நஞ்சை நிலத்திலும் கோடை உழவு செய்வது மிகவும் அவசியமாகும் கோடை உழவு செய்த நிலத்தில். மண்வெடிப்பு உண்டாவதில்லை. இதனால் கோடையில் பெய்யும் மழைநீர் நிலைநிறுத்தப்பட்டு சேமிக்கப்படுகிறது. மேலும் மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் மற்றும் பூஞ்சாணங்கள் மண்ணின் மேற்புரம் கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகின்றன.
- வெப்பநிலை தொடர்ந்து அதிகமாக காணப்படுவதால் தங்கள் கால்நடைகளுக்கு தினந்தோறும் போதுமான அளவு குளிர்ந்த நீரைக் கொடுக்கவும். ஒரு நாளைக்கு 2 - 3 தடவை கால்நடைகள் மீது தண்ணீர் தெளித்து விடவும். நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு விலங்குகளுக்கும் 40 முதல் 50 கிராம் தாது உப்பு கலவையினை கொடுப்பது நல்லது.